ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

පාසල්වලට සිසුන් තෝරා ගැනීමට හා ශිෂ්‍යාධාර ප්‍රදානය කිරීමට
5 ශ්‍රේණියේ සිසුන් සඳහා පැවැත්වෙන විභාගය
பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும்
மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5 ஆம்
தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

# ව්‍යවස්ථාව
## பிரமாணங்கள்
# 2022

පාසල්වලට සිසුන් තෝරා ගැනීමට හා ශිෂ්‍යාධාර ප්‍රදානය කිරීමට
5 ශ්‍රේණියේ සිසුන් සඳහා පැවැත්වෙන විභාගය

**ව්‍යවස්ථාව**

සියලු ම විදුහල්පතිවරුන් වෙත,

## 1.0 හැඳින්වීම

1.1 මෙම විභාගය "පාසල්වලට සිසුන් තෝරා ගැනීමට හා ශිෂ්‍යාධාර ප්‍රදානය කිරීමට 5 ශ්‍රේණියේ සිසුන් සඳහා පැවැත්වෙන විභාගය" යනුවෙන් හැඳින්වේ.

1.2 රජය විසින් නියම කරනු ලබන පරිදි දිස්ත්‍රික් මට්ටමින් ශිෂ්‍යාධාර ලබන ශිෂ්‍යත්ව ප්‍රමාණයක් පිරිනැමීම සඳහා ද වැඩි පහසුකම් ඇති ජාතික මට්ටමේ පාසල්වල ඇති පුරප්පාඩු පිරවීම සඳහා ද මෙම විභාගයේදී ලබා ගන්නා වූ මුළු ලකුණු ප්‍රමාණය පදනම් කර ගනු ලැබේ.

1.3 මෙම ව්‍යවස්ථා සංග්‍රහය 1995 හා ඉන් පසු ව පැවැත්වෙන විභාග සඳහා බල පැවැත්වේ.

1.4 **මෙම විභාගයට ඉදිරිපත් කිරීමට සුදුසුකම් ඇති සිසුන් සිටින සියලු ම විද්‍යාලවල විදුහල්පතිවරුන් මෙම ව්‍යවස්ථාව සුපරීක්ෂාකාරී ව කියවා නියමිත පරිදි පිළිපැදිය යුතු ය.**

1.5 මෙම විභාගය සම්බන්ධයෙන් විමසන සිසුන්ගේ දෙමාපියන්ට හෝ භාරකරුවන්ට හෝ මෙම ව්‍යවස්ථාව කියවා බැලීමට අවස්ථාව සැලසිය යුතු ය. අවශ්‍ය වූ විටෙක ව්‍යවස්ථාව නිසි පරිදි තේරුම් ගැනීමට ඔවුනට උපකාරී විය යුතු ය.

1.6 මෙම විභාගයෙන් ආධාර මුදල් ප්‍රදානය සඳහා තෝරා ගනු ලබන සිසුන් මෙම ව්‍යවස්ථාවේ සඳහන් නියමයන් සපුරාලන බවට වග බලා ගත යුතු ය.

## 2.0 පරමාර්ථ

2.1 වර්ෂයකට රු. 180,000.00 හෝ ඊට අඩු ආදායම් ලබන දෙමව්පියන්ගේ/නීත්‍යානුකූල භාරකරුවන්ගේ දරුවන්ට ආධාර මුදල් ප්‍රදානය කිරීම

2.2 තෝරා ගත් පාසල්වල 6 ශ්‍රේණියට සිසුන් ඇතුළත් කිරීම
උක්ත පරමාර්ථ මුල් කොට මෙම විභාගය 5 ශ්‍රේණියේ සිසුන් සඳහා පැවැත්වේ. මෙම විභාගයේ දී සාමර්ථ්‍යතා තීරණය කරනු නොලැබේ.

## 3.0 සුදුසුකම්

3.1 සෑම අයදුම්කරුවකු ම ශ්‍රී ලාංකිකයකු විය යුතු ය.

3.2 විභාගයට ඉල්ලුම් කරන අවස්ථාවේ රජයේ විදුහලක හෝ රජය විසින් අනුමත කරනු ලැබූ විදුහලක හෝ පස්වන ශ්‍රේණියේ ඉගෙනුම ලබන සිසුවකු විය යුතු ය. එසේ වුවද 2.1 යටතේ දක්වා ඇති ශිෂ්‍යාධාර ලබා ගැනීම සඳහා හිමිකම ඇත්තේ 2023 ජනවාරි 31 වන දිනට අවුරුදු 11ට අඩු හා අවුරුදු 10 හෝ අවුරුදු 10ට වැඩි සිසුන් සඳහා පමණි.

## 4.0 ආධාර මුදල් ප්‍රදානය

අයදුම්කරුවන් ශිෂ්‍යාධාර අපේක්ෂා කරන්නේ නම්, ඉහත 3.0 හි දක්වා ඇති සුදුසුකම්වලට අමතර ව ඔවුන්ගේ දෙමව්පියන්/නීත්‍යානුකූල භාරකරුවන් සියලු ම මාර්ගවලින් වර්ෂයකට රු. 180,000.00 හෝ ඊට අඩු ආදායම් ලබන අය විය යුතු ය. රජය මගින් ක්‍රියාත්මක කරන "සමෘද්ධි" වැඩසටහන මගින් ලැබෙන ප්‍රදානයන් මෙම ආදායම් සීමාවට බලපාන්නේ නැත. මෙම සුදුසුකම් සනාථ කිරීම සඳහා මුළු වාර්ෂික ආදායම පිළිබඳ ව ඔබ විසින් අදාළ ප්‍රාදේශීය ලේකම් වෙත යොමු කරන ලදුව ආදායම අඩු හෝ වැඩි ලෙස සඳහන් කර නැවත ඔබ වෙත ලබාගත් ලේඛන පදනම් කර ගත යුතු අතර එම ලේඛන ආරක්ෂා සහිතව ගොනු කර තැබිය යුතු ය. විභාග ප්‍රතිඵල අනුව ශිෂ්‍යාධාර ලැබීමට සුදුසුකම් ලැබුවහොත් නැවත ආදායම සහතික කිරීම අවශ්‍ය නොවනු ඇත. **දෙමව්පියන්ගේ හෝ නීත්‍යානුකූල භාරකරුවන්ගේ හෝ ආදායම නිවැරදිව ඇතුළත් කිරීම විදුහල්පතිගේ වගකීමකි.**

අයදුම්කරුගේ නම හා ආදායම් විස්තර පරීක්ෂා කර බලා එය නිවැරදි බව සහතික කිරීමට දෙමව්පිය/ නීත්‍යානුකූල භාරකරු විසින් මුද්‍රණය කරගත් අයදුම්පත්‍රයේ අදාළ තීරුවේ සිය අත්සන යෙදිය යුතු ය. අත්සන යොදා අවශ්‍ය සහතික කිරීම් කර නොමැති අයදුම්කරුවන්ට ඇති වන අපහසුතා පිළිබඳ ව වගකීම අයදුම්කරුගේ භාරකරු විසින්ම දැරිය යුතු ය.

**ආදායම් තීරුව හිස්ව නොතිබිය යුතු ය.**

**ආදායම වර්ෂයකට රු. 180,000.00ට වැඩි නම් "වැඩි" ලෙස ද ආදායම රු. 180,000.00ට අඩු නම් "අඩු" ලෙස ද ආදායම් සටහන් වන තීරුවේ ඇතුළත් කරන්න. මෙම තීරුව නොසැලකිලිමත් ව සම්පූර්ණ කිරීම හේතුවෙන් යම් සිසුවකුට ශිෂ්‍යාධාර අහිමි වුවහොත් ඊට වගකිව යුත්තන්ට එරෙහිව විනයානුකූලව කටයුතු කිරීමට පියවර ගන්නා බව තරයේ සිහි තබා ගත යුතු ය.**

## 5.0 ආධාර මුදල් ප්‍රදාන ක්‍රමය

මෙම ව්‍යවස්ථාවේ සඳහන් සුදුසුකම් සපුරාලන හා මෙම විභාගයේ ප්‍රතිඵල මත ආධාර මුදල් ලැබීම සඳහා තෝරා ගනු ලබන සිසුන්ට 6 වන ශ්‍රේණියේ සිට 13 වන ශ්‍රේණිය තෙක් ආධාර මුදල් ගෙවනු ලැබේ. පාසල්වල ශිෂ්‍ය නේවාසිකාගාර ඇතොත් ඒවායේ ඇති වන පුරප්පාඩු පිරවීමේදී ද ශිෂ්‍යාධාරලාභීන්ට ප්‍රමුඛත්වය හිමි වේ.

**6.0 ආධාර මුදල් ප්‍රදාන කාල සීමාව**

6.1 ප්‍රථමයෙන් මෙම කාලසීමාව අවුරුදු 6 කට සීමා වේ. මෙම සය අවුරුදු කාලය තුළ ශිෂ්‍යාධාරලාභියා අඛණ්ඩව අ.පො.ස.(සා.පෙළ) දක්වා ඉගෙනීමෙන් පසු එය තව දුරටත් දීර්ඝ කිරීම සලකා බලනු ලබන්නේ අ.පො.ස.(සා.පෙළ) විභාගයට පෙනී සිටින මුල් වතාවේ දී ම අ.පො.ස.(උ.පෙළ) පන්තියට ඇතුළත් වීමට අවශ්‍ය සුදුසුකම් ලද හොත් පමණි. මෙසේ දීර්ඝ කරනු ලබන ශිෂ්‍යාධාර අ.පො.ස.(උ.පෙළ) පන්තියට ඇතුළත් වූ දින සිට අවුරුදු දෙකක කාල සීමාවක් සඳහා ගෙවනු ලැබේ.

6.2 ශිෂ්‍යාධාරලාභීන් විසින් පිළිපැදිය යුතු කොන්දේසි පිළිබඳව ආධාර මුදල් ප්‍රදානය කරන අවස්ථාවේ දී දන්වනු ලැබේ. එසේ දන්වනු ලබන කොන්දේසි යථා පරිදි පිළිපැදීම අනිවාර්ය බව විශේෂයෙන් සැලකිය යුතු ය.

**7.0 විභාග පරිපාටිය**

7.1 එක් දිනක් තුළ දී පැවැත්වෙන මෙම විභාගය ප්‍රශ්න පත්‍ර දෙකකින් සමන්විත වේ.
I වන පත්‍රය (කාලය පැය 1 යි)
II වන පත්‍රය (කාලය පැය 1 විනාඩි 15 යි)

- I වන පත්‍රය
  සිසුන්ගේ ඉගෙනුම් හැකියා තක්සේරු කිරීම සඳහා සුදුසු අන්දමේ ප්‍රශ්න මෙම පත්‍රයට ඇතුළත් කෙරේ.

- II වන පත්‍රය
  1 ශ්‍රේණියේ සිට 5 ශ්‍රේණිය දෙවන වාරය දක්වා වූ සමස්ත විෂය මාලාව ම ඇසුරු කරගෙන මෙම ප්‍රශ්න පත්‍රය සැකසේ.

7.2 අයදුම්කරුවන් විභාගයට පිළිතුරු සැපයිය යුත්තේ ප්‍රශ්න පත්‍රවල ම ය. ඔවුන් තමන්ට හිමි විභාග අංකය පමණක් ඒවායෙහි ලිවිය යුතු අතර තම නම හෝ විදුහලේ නම හෝ ලිවීමෙන් වැළකිය යුතු ය. පිළිතුරු සැපයීම සඳහා නිල්, කළු පෑනක් හෝ පැන්සලක් හෝ භාවිත කළ යුතු ය. පැන්සලෙන් පිළිතුරු සපයන්නේ නම් පැහැදිලිව ලියවෙන පැන්සලක් භාවිත කිරීමට අයදුම්කරුවන්ට උපදෙස් ලබා දෙන්න. විදුහල්පතිවරුන් මෙම උපදෙස් තම පාසලේ අයදුම්කරුවන්ට තේරුම් කර දෙනු ඇතැයි ද උපදෙස් අනුගමනය කිරීම පිළිබඳ ව පුහුණුවක් ඔවුන්ට ලබා දෙනු ඇතැයි ද අපේක්ෂා කෙරේ.

**8.0 විභාගය පැවැත්වෙන මාසය**

විභාගය පැවැත්වෙන්නේ අගෝස්තු මාසය තුළ දීය. නමුත් කාලීන වශයෙන් පවතින තත්ත්වයන් අනුව විභාගය පැවැත්වෙන මාසය වෙනස් විය හැකිය.

**9.0 විභාගයට ඉදිරිපත් වීම**

9.1 මාර්ගගත (online) ආකාරයෙන් විභාගයට අයදුම් කිරීමේ උපදෙස් පත්‍රය හා ව්‍යවස්ථාව විභාග කොමසාරිස් ජනරාල් විසින් එවනු ලැබේ. අදාළ උපදෙස් හා ව්‍යවස්ථාව නොලැබුනහොත් පාසල් ප්‍රධානීන් විසින් විභාග කොමසාරිස් ජනරාල් වෙත ඉල්ලුම් කළ යුතු ය.

9.2 ඉහත (3) ඡේදයේ සඳහන් සුදුසුකම් සියල්ල සපුරා ඇති සිසුන් සියලු දෙනා ම මෙම විභාග යට ඉදිරිපත් කරවීම විදුහල්පතිවරුන්ගේ වගකීමකි. ඉදිරිපත් කරනු ලබන සියලු ම සිසුන්ට විභාගය පැවැත්වෙන දිනය හා වේලාව කල් ඇති ව දැනුම් දීම ද විශේෂයෙන් කළ යුතු ය.

9.3 උප්පැන්න සහතිකය අනුව ම, නම හා උපන් දිනය විදුහල්පතිවරුන් විසින් ඇතුළත් කළ යුතු ය.

9.4 පිටපත් දෙකකින් මුද්‍රණය කර ගත් ඉල්ලුම් පත්‍රය අයදුම්කරු සහ දෙමාපියන්/භාරකරුවන් ලවා තොරතුරු නිවැරදි බවට තහවුරු කොට ගෙන අත්සන් කර ගත් එක් පිටපතක් පාසලේ රඳවාගෙන අනෙක් පිටපත විභාග කොමසාරිස් ජනරාල් වෙත එවිය යුතුය.

**එහිදී සම්පූර්ණ නම, උපන් දිනය, මාධ්‍යය හා ආදායම නිවැරදිව ම ඇතුළත් වී ඇත්දැයි පරීක්ෂාවට දෙමාපියන්ට/භාරකරුවන්ට උපදෙස් දෙන්න. මෙම තොරතුරු නිවැරදිව ඇතුළත් කිරීම විදුහල්පතිගේ පූර්ණ වගකීමකි.**

**10.0 විභාග ප්‍රවේශ පත්‍ර**

10.1 අයදුම්කරුවන්ට විභාගයට පෙනී සිටීමට ඉඩ දෙන ලියවිල්ල ප්‍රවේශ පත්‍රයයි. විභාග අංක යොදන ලද පරිගණකයෙන් පිළියෙල කළ ප්‍රවේශ පත්‍ර ලැයිස්තුවක් විභාග දිනට අවම වශයෙන් සතියකටවත් පෙර අදාළ විදුහල්පතිවරුන් වෙත එවනු ඇත. එම ලැයිස්තුවේ පරිගණකයෙන් සටහන් කර ඇති තොරතුරු පාසලේ රඳවාගෙන ඇති අයදුම්පතේ පිටපතේ තොරතුරු සමග සසඳා බැලිය යුතුයි. වරදක් හෝ වෙනසක් හෝ ඇතොත් විභාගයට පෙර අවශ්‍ය සංශෝධන කරවා ගත යුතු ය.

10.2 විභාගය පවත්වන දිනට යටත් පිරිසෙයින් සතියකට කලින් විදුහල්පති වෙත මෙම ලැයිස්තුව නොලැබුනහොත් ඒ බව විභාග කොමසාරිස් ජනරාල් වෙත වහා ම දැන්විය යුතු ය.

10.3 ප්‍රවේශ පත්‍රය ලැබුණු වහා ම අයදුම්කරුවන්ගේ නම්වලට ඉදිරියෙන් යොදා ඇති ඔවුන්ගේ විභාග අංක නිවැරදි ව ලබා දීමට කටයුතු කළ යුතු ය.

## 11.0 අයදුම්කරුවන්ගේ අනන්‍යතාව

11.1 සිසුන්ගේ අනන්‍යතාව සහතික කිරීම සඳහා ද සිසුවකු වෙනුවෙන් වෙනත් අයකු පෙනී සිටීම හෝ වෙනත් ගැටලුකාරී තත්ත්වයන් ඇති වීම වැළැක්වීම සඳහා ද විදුහල්පති හෝ ඔහුගේ විශේෂ බලය ලත් ගුරුභවතකු හෝ සිසුන් සමග විභාග ශාලාවට පැමිණ, පාසල් ප්‍රවේශ පත්‍රය විභාග ශාලාධිපතිට භාර දිය යුතු ය. එක් එක් සිසුනට නියමිත ආසනයෙහි ඔවුන් වාඩි කරවීමට විභාග ශාලාධිපතිට සහාය වීම සිසුන් රැගෙන එන ගුරුභවතාගේ වගකීමකි. එහෙත් ප්‍රශ්න පත්‍ර බෙදා දීමට කලින් ඔහු /ඇය විභාග ශාලාවෙන් ඉවත් ව යා යුතු ය. මේ සඳහා පැමිණෙන විදුහල්පතිට හෝ වෙනත් ගුරු භවතකුට හෝ රජයේ මුදල් රෙගුලාසි යටතේ අනුමත විශේෂ දීමනාවක් ගෙවනු ලැබේ. විභාග ශාලාවට පැමිණි බවට විභාග ශාලාධිපතිගෙන් ලබාගත් සහතිකයක් ද දීමනා/ විශේෂ ගාස්තු ඉල්ලුම් පත්‍රය සමග ඉදිරිපත් කළ යුතු ය. තමන්ගේ දරුවකු මෙම විභාගයට ඉදිරිපත් වන්නේ නම් සිසුන් රැගෙන යාමට සහභාගී නොවිය යුතු ය.

11.2 සිසුන් ආසනවල වාඩි කර වීමේ දී ඉතාමත් සැලකිලිමත් විය යුතු ය. අයදුම්කරුගේ නිවැරදි විභාග අංකයට ම අදාළව වාඩි කර වීම සිසුන් රැගෙන එන විදුහල්පතිගේ / ගුරු භවතාගේ වගකීමක් වනු ඇත.

## 12.0 ප්‍රතිඵල නිකුත් කිරීම හා පාසල් ලබා දීම

12.1 විභාග කොමසාරිස් ජනරාල් විසින් සියලු ම අයදුම්කරුවන් වෙත නිකුත් කරනු ලබන ප්‍රතිඵල අනුව අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම් විසින් ආධාර මුදල් ප්‍රදානය කිරීම සඳහා සහ අයදුම් කර ඇති පාසල් ලබා දීම සඳහා සිසුන් තෝරා ගනු ලැබේ. එසේ තෝරාගනු ලබන අයදුම්කරුවන්ට අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම් විසින් විදුහල්පතිවරු මගින් ඒ බව දන්වනු ඇත. සුදුසුකම් ලැබූ අයදුම්කරුවන්ගේ අයදුම්පත් නියමිත කාල සීමාව තුළ විදුහල්පතිවරුන් විසින් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ පාසල් කටයුතු ශාඛාවේ අධ්‍යාපන අධ්‍යක්ෂ වෙත ඉදිරිපත් කළ යුතු ය.

12.2 විභාගයේ දී දැක්වූ සමර්ථතා මට්ටම, ඒ ඒ පාසල්වල ඇති ඇබෑර්තු සංඛ්‍යාව හා දෙමාපියන්ගේ ඉල්ලීම පදනම් කොට අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම් විසින් අයදුම්කරුවන් සඳහා පාසල් ලබා දෙනු ඇත.

12.3 ආධාර මුදල් ප්‍රදානය සඳහා තෝරා ගනු ලැබූ අයදුම්කරුවකු මෙහි 3 සහ 4 ඡේදය අනුව නුසුදුස්සකු යැයි පසු ව අනාවරණය වුව හොත් පෙර කී තෝරා ගැනීම අවලංගු කරනු ලැබේ.

12.4 ආධාර මුදල් ප්‍රදානය සඳහා සුදුසුකම් සනාථ කරන ලෙස අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම් විසින් දන්වන සිසුන්ගේ දෙමාපියන් / භාරකරුවන් එම සිසුන්ගේ සුදුසුකම් මෙහි 4 වන ඡේදය අනුව ආධාර මුදල් ප්‍රදානයට අදාළ ලියවිලිවලින් සිසුවා යොමු කරනු ලබන විදුහල පිහිටි ප්‍රදේශයේ පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂ / කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ / කොට්ඨාස අධ්‍යාපන අධ්‍යක්ෂ වෙත ඔප්පු කළ යුතු ය.

## 13.0 වයස හා ආදායම සනාථ කිරීම

13.1 රෙජිස්ට්‍රාර් ජනරාල් විසින් හෝ දිස්ත්‍රික් රෙජිස්ට්‍රාර් විසින් හෝ නිකුත් කරන ලද උප්පැන්න සහතිකයක් හෝ වයස පිළිබඳ සහතිකයක්, (ශිෂ්‍යයකුගේ උප්පැන්නය ලියාපදිංචි කර නැත්නම්, දෙමාපියන් හෝ භාරකරුවන් විසින් ඉදිරිපත් කරන දිවුරුම් පෙත්සමක්) ඉදිරිපත් කළ යුතු ය. ශිෂ්‍යයාගේ උප්පැන්නය ලියාපදිංචි කොට නැති බව ද එය ලියා පදිංචි කොට උප්පැන්න සහතිකයක් හෝ වයස පිළිබඳ සහතිකයක් හෝ රෙජිස්ට්‍රාර් ජනරාල්ගෙන් ලබා ගැනීමට කටයුතු කරන බව ද දෙමාපියන් හෝ භාරකාරයා හෝ දන්නා පරිදි, ශිෂ්‍යයාගේ උපන් දිනය සහ උපන් ස්ථානය මේ යැයි ද එම දිවුරුම් පෙත්සමෙහි සඳහන් කළ යුතු ය. දිවුරුම් පෙත්සම් භාර ගනු ලබන්නේ තාවකාලික වශයෙන් බව දෙමාපියන් සහ භාරකරුවන් තේරුම් ගත යුතු වේ. උප්පැන්න සහතිකය හෝ වයස පිළිබඳ සහතිකය ලැබුණු වහා ම දෙමාපියන් හෝ භාරකරුවන් හෝ විසින් එය ඉදිරිපත් කළ යුතු වේ.

13.2 මෙම ව්‍යවස්ථාවන්හි 3.0 ඡේදයේ දක්වා ඇති නියමයන් අනුව අයදුම්කරු විභාගයට පෙනී සිටි පාසලේ විදුහල්පතිගේ සහතිකයක්

13.3 මෙම ව්‍යවස්ථාවෙහි 4.0 ඡේදයේ දක්වා ඇති නියමයන් අනුව මව්පිය දෙදෙනාගේ / නීත්‍යනුකූල භාරකරුගේ මුළු වාර්ෂික ආදායම් පිළිබඳ ප්‍රාදේශීය ලේකම්ගේ සහතිකය. (මුදල් ආධාර ලැබීමට හිමිකම් ඉදිරිපත් කරන සිසුන්ට මේ ලියවිල්ල අදාළ වේ.)

## 14.0 වෙනත් කරුණු

මෙම ව්‍යවස්ථාවෙන් විධිවිධාන සලසා නොමැති කරුණු පිළිබඳ ව තීරණයකට එළඹීම විභාග කොමසාරිස් ජනරාල් විසින් (අවශ්‍ය නම් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම්ගේ ද අනුමැතිය ඇති ව) සිදු කරනු ඇත.

2022 ජූලි 07 දින
පාසල් විභාග සංවිධාන හා ප්‍රතිඵල ශාඛාව
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
පැලවත්ත, බත්තරමුල්ල.

එල්.එම්.ඩී. ධර්මසේන
විභාග කොමසාරිස් ජනරාල්

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக 5 ஆம் தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

### பிரமாணங்கள்

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**1.0 அறிமுகம்**

1.1 இப் பரீட்சை "பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5ஆம்தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும் மேலும், சிறந்த வசதிகளைக் கொண்டிருக்கின்ற தேசிய பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

1.3 இப்பிரமாணங்கள் 1995 இலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

1.4 **இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடைய மாணவர்கள் உள்ள சகல பாடசாலைகளின் அதிபர்களும் இப் பிரமாணங்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுதல் வேண்டும்.**

1.5 இப் பரீட்சை தொடர்பாக அறிய விரும்பும் பெற்றோர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் இப்பிரமாணங்கள் கொடுக்கப்படல் வேண்டும். தேவைப்பட்டால், பிரமாணங்கள் அவர்களுக்குத் தெளிவாக விளக்கப்படல் வேண்டும்.

1.6 இப்பரீட்சையின் பிரகாரம் உதவிப் பணம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படும் மாணவர்கள் இப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை நிறைவேற்றுவதை நீங்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**2.0 நோக்கங்கள்**

2.1 ரூபா 180,000.00 அல்லது அதற்கும் குறைந்த வருடாந்த வருமானத்தையுடைய பெற்றோர்களின்/சட்டரீதியான பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கு உதவிப் பணத்தை வழங்குதல்

2.2 தெரிவு செய்த பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் நோக்கத்துடன் இப்பரீட்சை 5 ஆம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படுகிறது. இப்பரீட்சையிலே சித்திகள் ஏதும் தீர்மானிக்கப்படமாட்டாது.

**3.0 தகைமைகள்**

3.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், இலங்கையராக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பத்தை அனுப்பும் சமயத்திலே அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் 2.1 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர் 2023 ஜனவரி 31 ஆம் தினத்தில் 11 வயதுக்கு குறைந்த அல்லது 10 வயதுடைய அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமேயாகும்.

**4.0 உதவிப் பணம் வழங்குதல்**

பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற விரும்பினால் மேலே 3.0 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் வருடத்துக்கு ரூபா 180,000.00 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "சமூர்த்தி" வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த மொத்த வருமானம் தொடர்பாக உங்களால் பிரதேச செயலாளருக்கு வருமானம் கூடவோ குறைவோ எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டு மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுக்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்தப்பட வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை. **பெற்றோரின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் வருமானத்தைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.**

பரீட்சார்த்திகளின் பெயர், வருமான விபரம் என்பவற்றைச் சரிபார்த்து அவை சரியானவை என்று உறுதிப்படுத்துவதற்கு பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கையொப்பமிடப்படல் வேண்டும். கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படாதவிடத்து பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர்.

> **வருமான நிரல் வெற்றிடமாக இருத்தல் கூடாது.**
>
> **வருமானம் 180,000.00 அதிகமாயின் "அதிகம்" என்றும் 180,000.00 வருமானம் குறைவாயின் "குறைவு" என்றும் வருமானத்தைக் குறிக்கும் நிரலில் குறிப்பிடவும். இந் நிரலைக் கவனயீனமாக பூரணப்படுத்துவதன் காரணமாக எந்தவொரு மாணவனுக்காவது புலமைப்பரிசில் கிடைக்கப் பெறாவிடின் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.**

## 5.0 உதவிப் பணத்தை வழங்கும் முறை

இப் பிரமாணங்களின் பிரகாரம் தகைமை பெற்று, இப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உதவிப்பணம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரை உதவிப்பணம் வழங்கப்படும். பாடசாலைகளில் விடுதி வசதியிருப்பின் அங்குள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது உதவிப்பணம் பெறுபவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

## 6.0 உதவிப்பணம் வழங்கப்படும் காலவரையறை

6.1 ஆரம்பத்தில் இக்காலவரையறை 6 வருடங்களுக்குக் மட்டுப்படுத்தப்படும். இந்த ஆறு ஆண்டு காலத்தின்போது உதவிப்பணம் பெறும் மாணவன்/மாணவி தொடர்ச்சியாக க.பொ.த. (சா.தர) வரை கற்ற பின்னர் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய முதற் தடவையில் க.பொ.த. (உ.த) வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவதற்கு அவசியமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே உதவிப்பணத்தை மேலும் தொடருவது கருத்திற் கொள்ளப்படும். இவ்வாறு தொடரப்படும் உதவிப்பணம் க.பொ.த(உ.தர) வகுப்பிற்குப் பிரவேசித்த நாள் தொடக்கம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும்.

6.2 உதவிப்பணம் பெறும் மாணவர்கள் அவர்களால் பின்பற்றப்படவேண்டிய நிபந்தனைகள் பற்றி உதவிப்பணம் பெறும்போது அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய நிபந்தனைகள் திட்ட வட்டமாகப் பின்பற்றப்படவேண்டியமை மிகவும் முக்கியமானதாகும்.

## 7.0 பரீட்சைச் செயன்முறை

7.1 ஒரே நாளில் நடைபெறும் இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

வினாப்பத்திரம் I (1 மணித்தியாலம்)

வினாப்பத்திரம் II (1.15 மணித்தியாலம்)

- வினாப்பத்திரம் I :- மாணவர்களின் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான வினாக்கள் இதில் அடங்கும்.
- வினாப்பத்திரம் II :- 1ஆம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் இரண்டாம் தவணை வரையுள்ள சகல பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியதாக இவ் வினாக்கள் அமையும்.

7.2 பரீட்சார்த்திகள் வினாத்தாளிலேயே வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். அவர்கள் வினாத்தாளில் தமது சுட்டெண்ணை மாத்திரமே எழுதுதல் வேண்டும். தமது பெயரையோ, பாடசாலைப் பெயரையோ எழுதுதல் ஆகாது. விடைகளை எழுதுவதற்கு நீல/கறுப்பு பேனையோ அல்லது பென்சிலையோ பயன்படுத்தல் வேண்டும். பென்சிலால் விடையளிப்பதாயின் தெளிவாக எழுதக்கூடிய பென்சிலை பயன்படுத்துவதற்கு பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தவும். பாடசாலை அதிபர்கள் இவ் அறிவுறுத்தல்களை தமது பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு விளக்கி இவை தொடர்பான பயிற்சியை அவர்களுக்கு அளித்தல் வேண்டும்.

**8.0 பரீட்சை நடாத்தப்படும் மாதம்**

இப் பரீட்சை ஒகஸ்ட் மாதத்திலேயே நடாத்தப்படுகின்றது. எனினும் ஏற்படுகின்ற நிலைமைகளுக்கு அமைவாக பரீட்சை நடாத்தப்படும் மாதம் மாற்றம் செய்யப்படும்.

**9.0 பரீட்சைக்குத் தோற்றுதல்**

9.1 நிகழ்நிலை முறைமையில் (Online) விண்ணப்பிப்பதற்கு அறிவுறுத்தல்களும் பிரமாணங்களும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரிய அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள் கிடைக்கப்பெறாவிடின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

9.2 மேலே 3ஆம் பந்தியின் பிரகாரம் தகைமைகள் அனைத்தையும் நிறைவேற்றிய அனைத்து மாணவர்களையும் இப்பரீட்சைக்கு அனுமதித்தல் அதிபரது பொறுப்பாகும். தோற்றவுள்ள சகல மாணவர்களுக்கும் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் என்பன பற்றி முற்கூட்டியே அறிவித்தல் அவசியமானது.

9.3 <u>மாணவர்களின் பிறப்புச் சான்றிதழுக்கமைய பெயரும், பிறந்த திகதியும் அதிபரினால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.</u>

9.4 அச்சுப்பிரதியெடுத்த இரண்டு பிரதிகளில் விண்ணப்பதாரி, பெற்றோர்/ பாதுகாவலர் வழங்கிய தகவல்கள் சரியானவையா என உறுதிசெய்து கையொப்பமிட்டு ஒரு பிரதியை பாடசாலையில் வைத்துக் கொண்டு மற்றைய பிரதியை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**அதில் முழுப்பெயர், பிறந்த திகதி, மொழிமூலம், வருமானம் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்து பெற்றோர்/ பாதுகாவலருக்கு அறிவுறுத்துக. இவ்விவரங்களை சரியாக உள்ளடக்குவது அதிபரின் முழுமையான பொறுப்பாகும்.**

**10.0 அனுமதி அட்டைகள்**

10.1 பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கக்கூடிய ஒரே பத்திரம் அனுமதி அட்டையாகும். கணினியின் மூலம் தயாரிக்கப்பட்ட சுட்டெண்கள் அடங்கிய பட்டியல் பரீட்சைத் திகதிக்கு ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்கு முன்னதாக உரிய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இக் கணினிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களை பாடசாலைப் பிரதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து மாற்றம் ஏதும் இருப்பின் பரீட்சைக்கு முன் தேவையான மாற்றத்தைச் செய்து கொள்ள வேண்டும்.

10.2 பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு முன்னர் பாடசாலை அதிபர்களுக்கு இப்படிவங்கள் கிடைக்கப் பெறாவிடின் அது தொடர்பாக அவர் **உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.**

10.3 அனுமதிஅட்டை கிடைக்கப்பெற்றதும் பரீட்சார்த்திகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள சுட்டெண்ணை பரீட்சார்த்திகள் சரியாகக் குறித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**11.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**

11.1 மாணவர்களின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகவும் ஆள்மாறாட்டம் அல்லது வேறு பிரச்சினைகளுக்கு இடமளிக்காதிருப்பதற்காகவும் அதிபர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படும் உதவி ஆசிரியர் ஒருவர் மாணவர்களுடன் பரீட்சை மண்டபத்துக்கு வந்து, சம்பந்தப்பட்ட பாடசாலையின் அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வழங்கப்பட்டுள்ள ஆசனங்களில் அவர்கள் அமருவதற்கு மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் மாணவர்களைக் கொண்டுவரும் ஆசிரியரின் பொறுப்பாகும். எனினும் வினாத்தாள்கள் வழங்கப்பட முன்பு அவர் பரீட்சை நிலையத்தை விட்டுச் செல்லல் வேண்டும். இதற்காக அதிபருக்கு அல்லது உதவி ஆசிரியருக்கு அரசாங்க நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும். விசேட கொடுப்பனவுக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் போது அதில் அவர் மாணவர்களுடன் பரீட்சை நிலையத்திற்கு வந்தார் என்று மேற்பார்வையாளர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். தமது பிள்ளைகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவாராயின் மாணவர்களை அழைத்துவரும் பணியை மேற்கொள்ளக் கூடாது.

11.2 மாணவர்களை ஆசனங்களில் அமர்த்தும்போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். மாணவர்களைச் சரியான சுட்டெண் கொண்ட ஆசனங்களில் அமர்த்துவது மாணவர்களைக் அழைத்துச் செல்லும் அதிபர்களின்/ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

**12.0 பெறுபேறுகளின் வெளியீடும் பாடசாலைகளைப் பெற்றுக் கொடுத்தலும்**

12.1 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சகல பரீட்சார்த்திகளுக்கும் வெளியிடப்படும் பெறுபேறுகளின் பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளரால் பணத்தை வழங்குவதற்காகவும் , கோரப்பட்ட பாடசாலைக்கு அனுமதி வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு கல்வி அமைச்சு செயலாளரினால் பாடசாலை அதிபரூடாக அது தொடர்பாக அறிவிக்கப்படும். விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் தகைமையுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரினால் கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைகள் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

12.2 பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலாகப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கு பெற்றோரின் வேண்டுகோளின் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளரினால் பரீட்சார்த்திகளுக்கு பாடசாலைகள் ஒதுக்கப்படும்.

12.3 உதவிப்பணம் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தியொருவர் இங்கு 3 ஆம் 4 ஆம் பந்திகளின் பிரகாரம் தகைமையற்றவர் என்று பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் அத்தகைய தேர்வு இரத்துச் செய்யப்படும்.

12.4 உதவிப் பணத்தைப் பெறுவதற்கான தகைமையை நிரூபிக்கும்படி கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அம் மாணவர்களின் தகைமையை இங்கு 4.0 இல் தரப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய பத்திரங்களை மாணவனுக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலை அமைந்துள்ள பிராந்தியத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர்/வலயக்/கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**13.0 வயது, வருமானம் என்பவற்றை உறுதிப்படுத்தல்**

13.1 பதிவாளர் நாயகத்தினால் அல்லது மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வயதை அத்தாட்சிப்படுத்தும் பத்திரம் (ஒரு மாணவரின் பிறப்புப்பதிவு செய்யப்படவில்லையெனின் பெற்றோர் / பாதுகாவலர் ஒரு சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்தல் வேண்டும். அச்சத்தியக் கடதாசி, அம்மாணவரின் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை எனவும் அவருடைய பிறப்பைப் பதிவு செய்து, ஒரு பிறப்பு அல்லது வயது அத்தாட்சிப் பத்திரத்தை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் பெற்றோருக்கு/பாதுகாவலருக்கு தெரிந்த அளவில் அம்மாணவர் குறித்த திகதியில் குறித்த இடத்தில் பிறந்தார் என்றும் கூறும் உறுதிக் கூற்றுக்களை அடக்கியிருத்தல் வேண்டும். சத்தியக் கடதாசிகள் தற்காலிகமாகவே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை பெற்றோர்/ பாதுகாவலர் அறிந்திருத்தல் வேண்டும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வயது அத்தாட்சிப் பத்திரம் கிடைத்தவுடன் அது அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.)

13.2 இப் பிரமாணங்களின் 3.0 ஆம் பந்திப் பிரகாரம் பரீட்சார்த்தி தோற்றிய பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றதொரு அத்தாட்சிப் பத்திரம்.

13.3 இப்பிரமாணங்களின் 4.0 ஆம் பந்திப் பிரகாரம், பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலரின் மொத்த வருடாந்த வருமானம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சிப்பத்திரம். (இவ் ஆவணம் உதவிப்பணத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு உரியது)

**14.0 ஏனைய விபரங்கள்**

இப் பிரமாணங்களின் ஏற்பாடுகளிலே குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் (தேவைப்படின் கல்வி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன்) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

எல்.எம்.டீ. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2022 ஜூலை 07 ஆம் திகதி
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த, பத்தரமுல்ல.

D:\New Volume\A\2022\Gr 5\Piramanangal.docx